**சார்பு நீதிமன்றம், துறையூர்.**

**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**OS.No.13/2023**

தேதி: 30.10.2025

பெயர் : பிரீத்தா (வா.சா.2) க/பெ: சதீஷ்குமார்

**குறுக்குவிசாரணை**

1. நான் 1988ம் வருடம் பிறந்தேன். நான் பி.ஏ.பி.எல் படித்துள்ளேன். நான் 1ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை கோயம்புத்தூர் ராஜலெட்சமி பள்ளியிலும், பிறகு 11, 12 ஆம் வகுப்புகள் கோயம்புத்தூர் பிஎஸ்ஜிஜி உயர்நிலைபள்ளியில் படித்தேன்.நான் சட்டக்கல்வி கோயம்புத்தூர் அரசு சட்டக்கல்லூரியில் படித்தேன். நான் 11, 12வது வகுப்புகள் விடுதியில் தங்கி படித்தேன். சட்டக்கல்லூரி வீட்டிலிருந்து தினமும் சென்று படித்தேன். என் தந்தை ELGI கம்பெனியில் பகுதிநேரமாக Homeguard ஆக 1991 முதல் 2001 வரை பணிபுரிந்தார். அந்தகாலகட்டத்தில் நாங்கள் கோயம்புத்தூரில் குடியிருந்தோம் என்றால் சரிதான். என் தகப்பனார் வேலையிலிருந்து நின்ற பிறகும் கோயம்புத்தூரில்தான் குடியிருந்தோம் என்றால் இல்லை. என் தகப்பனாருக்கு உடல்நிலை சரியில்லாததால் இங்கு வந்துவிட்டோம். 2001ம் ஆண்டுக்கு பிறகு 5 வருடம் குடும்பத்தோடு என் அப்பா இங்கு வந்துவிட்டார்.

2. அதன்பிறகு மீண்டும் சிகிச்சைக்காக கோயம்புத்தூர் சென்றுவிட்டோம். இடைப்பட்ட 5 வருட காலம் செங்காட்டுப்பட்டியில் குடியிருந்ததற்காக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் என் தந்தையின் வங்கி கணக்கு புத்தகம் மட்டும் நான் தாக்கல் செய்துள்ளேன். என் அப்பா இறந்தபிறகு என் அம்மா கோயம்புத்தூரில் இருந்தார் என்றால் இல்லை. என் தாத்தாவுடன் செங்காட்டுப்பட்டியில் இருந்தார். என் அம்மா எவ்வளவு காலம் என் தாத்தாவுடன் இருந்தார் என்றால் அவர் இங்கும் இருப்பார், கோயம்புத்தூரிலும் என் அண்ணன் வீட்டிற்கு வந்து செல்வார். நிரந்தரமாக இங்கிருந்தார். அவ்வப்போதுதான் கோயம்புத்தூர் வருவார். என் அம்மா செங்காட்டுப்பட்டியில் இருந்தார் என்பதற்கு எந்தவித ஆவணமும்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் பிரமாணவாக்குமூலத்தில் 6 வது பத்தியில் எங்களுக்கு 4 ல் ஒரு பங்குள்ளது என கூறியுள்ளேன்.

3. என் அப்பா வழக்குச்சொத்தைப் பொறுத்து 1982 ல் விடுதலைபத்திரம் எழுதிகொடுத்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், அந்த ஆவணத்தை என் அப்பா என் தாத்தாவின் சம்மதத்துடன் 15.07.2002 ம் ஆண்டு ரத்து செய்துவிட்டார். என் தாத்தா அந்த ரத்துபத்திரத்தில் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். என் பாட்டியும், சித்தப்பாவும் கையெழுத்து செய்துள்ளார். என் தாத்தா ரெங்கசாமிரெட்டியார் ரத்துபத்திரத்தில் தரப்பினராக இல்லாததால் அந்த பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பங்குரிமை கேட்க எங்களுக்கு எந்த முகாந்திரமும் இல்லையென்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பத்தாவது பாராவில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய் எனவும், உண்மையாகவே பாகம் பிரித்துக்கொடுக்க வேண்டும் என்றால் என் தாத்தா பிரித்துகொடுத்திருப்பார் எனவும், என் அப்பா பாக விடுதலை பத்திரம் எழுதிகொடுத்ததால்தான் பாகம் பிரித்துக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

4. என் அப்பா இறந்தபிறகு என் தாத்தாவிடம் பாகம் கேட்டேனா என்றால் கேட்டேன். அதற்கு அவர் நான் இறந்தபிறகு பாகம் பிரித்துக்கொள்ளுங்கள் என கூறினார். மேற்படி விபரத்தை பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தாவாவில் சொல்லியுள்ளேன். தாவாவில் மேற்படி விபரம் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்குரையிலும் வழக்கறிஞர் அறிவிப்பிலும் என் அப்பா விடுதலை பத்திரம் எழுதிகொடுத்து அதன் பிறகு அதை ரத்துசெய்துவிட்டார் என்று கூறவில்லை என்றால் சரிதான். பதில்வழக்குரையில் சொல்லியுள்ளேன். பிரதிவாதிகள் தரப்பில் அனுப்பிய பதில் அறிவிப்பில் ரெங்கசாமி பதிவுசெய்யப்படாத உயில் ஆவணம் எழுதிவைத்துள்ளார் என கூறியுள்ளாரா என்றால் கூறியுள்ளார். ஆனால் அது உண்மையல்ல. அந்த உயில்ஆவணத்தை வாங்கி பார்த்தேனா என்றால் பதிலுரை தாக்கல் செய்யும்போது வாங்கி பார்த்தோம்.

5. அந்த உயில் ஆவணத்தில் எழுதியுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த உயில் ஆவணத்தில் யார் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என தெரியுமா என்றால் தெரியும்.

சாட்சிகளை சந்தித்து உயில் ஆவணத்தைப்பற்றி கேட்டேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1560 சதுரடி ஆகும். வழக்கறிஞர் அறிவிப்பில் 1550 என குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியும். தாவா வீடு தெற்குப்பார்த்த வீடு ஆகும். வீட்டிற்கு கிழக்குபுறம் செல்வராஜ் உள்ளார். செல்வராஜியின் குடும்ப வரலாறு தெரியுமா என்றால் அவருக்கு இரண்டு பெண்கள் மற்றும் ஒரு மகன் உள்ளார். செல்வராஜி எங்களுக்கு ஆதரவாக எங்களுடைய கூட்டுச்சுவாதீனத்தை கூற சாட்சியாக அழைக்க உள்ளோமா என்றால் இல்லை. தாவா சொத்து மற்ற 3 புறங்களிலுள்ள சந்திரமோகன், குமார், வின்செண்ட், பால்ராஜ் ஆகியோரை எங்களுக்கு சாட்சியாக சொல்ல அழைக்க உள்ளோமா என்றால் இல்லை.

6. செங்காட்டுப்பட்டி கிராமத்தில் எங்கள் தெருவில் உள்ள நபர்களை நாங்கள் அங்குதான் கூட்டுக்குடும்பமாக குடியிருந்தோம் என காட்ட சாட்சியாக விசாரிக்க உள்ளோமா என்றால் ஆமாம். என்னுடைய பிரமாணவாக்குமூலம் 3ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள பசுபதி மனைவி மாலா என்பவர் விடுதலை ஆவணத்தை என் தாத்தாவுக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். தாவாசொத்து எனது தாத்தாவிற்கு எவ்வாறு கிடைத்தது என்பதுபற்றிய விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பில் என் அம்மாவின் சீர்வரிசைபொருட்கள் தாவா வீட்டில் இருப்பதாக கூறப்பட்டுள்ளது, இந்த விபரங்கள் வழக்குரையிலோ, பதில் வழக்குரையிலோ, வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். கூட்டுசுவாதீனம் என மட்டும் சொல்லியிருந்தேன். வழக்கறிஞர் அறிவிப்பில் 6வது பத்தியில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையில்லை என்பதால்தான் வழக்குரையிலோ, பதில் வழக்குரையிலோ, வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி 07.11.2025 அன்று ஒத்திவைக்கப்பட்டுள்ளது.**

/உண்மை நகல்/

(ஒம்)/-C.விஜய் கார்த்திக்,
சார்பு நீதிபதி,
துறையூர்.